# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

ஞாயிற்றுக்கிழமை 09.05.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# இலங்கையில் 5 வகையான கொரோனா வைரஸ் பரவல்

## ஆய்வில் வெளியான அதிர்ச்சி தகவல்

(ராஜ்)

இலங்கையில் 5 புதிய வகை கொரோனா வைரஸ் பரவி வருகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின், ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான பீடத்தினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, மன்னார், மட்டக்களப்பு, குருநாகல், மற்றும் களுத்துறை

02 ஆம் பக்கத்தில்...

## முடங்கியது திருமலை



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்டத்தில் அதிக கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளங் காணப்பட்டதைத் தொடர்ந்து பல கிராம சேவகர் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், திருகோணமலை நகர்ப் பகுதியில் மருந்தகங்கள், அத்தியாவசியத்

02 ஆம் பக்கத்தில்...

## திருமலையில் 18 பேர் பலி 1831 பேருக்கு தொற்று உறுதி



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை 18 பேர் கொரோனாவினால் மரணித்துள்ளதாகவும், 1831 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அதிக மரணங்கள் திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில்


02 ஆம் பக்கத்தில்...

## 138 கிராம அலுவலகர் பிரிவுகள் முடக்கம்

இலங்கையில் ஏப்ரல் மாத புது வருடத்தைத் தொடர்ந்து தற்போது பரவி வரும் கோவிட் வைரஸ் பரவலின் 3ஆம் அலையைத் தொடர்ந்து, இது வரை நாட்டின் 14 மாவட்டங்களில் உள்ள 138 கிராம அலுவலகர் பிரிவுகள் முடக்க நிலையில்

02 ஆம் பக்கத்தில்...

## போக்குவரத்து போலிஸ் பொறுப்பதிகாரியை மோதிய வாகன சாரதி அம்பாறையில் கைது



(பாறுக் ஷிஹான்)

கடமையில் ஈடுபட்ட போக்குவரத்து பொலிஸார் மீது வேகமாக வந்த கப் வாகனம் மோதியதில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் கப் வாகன சாரதி கைதாகியுள்ளார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை அம்பாறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மண்டல

02 ஆம் பக்கத்தில்...

## இந்திய வைரஸுடன் இலங்கையில் ஒருவர்

இந்தியாவில் பரவும் புதிய வகை கொரோனா வைரஸ் தொற்றிய ஒருவர் இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு மற்றும் உயிரணு விஞ்ஞானபீடத்தின் பணிப்பாளர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் பரவும் புதிய வகை கொரோனா வைரஸ் இலங்கையில் அடையாளம் காணப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...






## 130 கர்ப்பிணிகளுக்கு கோவிட் இருவரின் நிலை கவலைக்கிடம்


கொரோனா தொற்றுக்குள்ளான 130 கர்ப்பிணிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவதாக குடும்ப நல சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## கொரோனா நிதியத்தின் 1,600 மில்லியன் ரூபா நிதி எங்கே?

### சாணக்கியன் கேள்வி!



இதுவொரு இன துவேசமான அரசாங்கம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

கொரோனா தடுப்பூசியின்

02 ஆம் பக்கத்தில்...

## 10 நாட்களில் 10 ஆயிரம் கட்டில்கள்

(ஊர்காவலன்)

கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக பத்து நாட்களுக்குள் 10,000 கட்டில்கள் ஏற்பாடு செய்யப்படும் என்று பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பை அச்சுறுத்தும் கொரோனா கட்டுப்படுத்த விழிப்புணர்வு நடவடிக்கை



(மட்டுநிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தினை மீண்டும் அச்சுறுத்த ஆரம்பித்துள்ள கோவிட் 19 வைரசின் மூன்றாவது அலையினை கட்டுப்படுத்துவதற்கான பல்வேறுபட்ட விழிப்புணர்வு நடவடிக்கைகள் மாவட்டம் பூராகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

02 ஆம் பக்கத்தில்...






## மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்று மருத்துவ துறைக்கு தேர்வான மாணவனுக்கு கௌரவிப்பு



(ரக்ஸனா)

2020 ஆண்டு நடைபெற்ற உயர்தர பரீட்சை பெறுபேறுகள் அண்மையில் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்

02 ஆம் பக்கத்தில்...







## 10 நாட்களில் 10 ஆயிரம் கட்டில்கள்

நாட்டில் அதிகரித்து செல்லும் கொரோனா தாக்கம் தொடர்பில் அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, புத்தளம், குருநாகல் ஆகிய மாவட்டங்களில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். மேலும், பத்தாயிரம் கட்டில்களுக்கு மேலதிகமாக மாவட்ட மட்டத்தில் மேலதிக சிகிச்சை நிலையங்களை இனங்கண்டு அவற்றுக்கு தேவையான கட்டில்களும் உபகரணங்களும் வழங்கப்படும் எனவும் இதன் பொறுப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு தலைவர்களுக்கு வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கை பொறியியலாளர் முன்னணி வைத்தியசாலைகளின் தொழில்நுட்ப குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு முன் வந்துள்ளதாகவும் பசில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

## மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்று மருத்துவ

தேசிய பாடசாலையின் உயிரியல் விஞ்ஞான பிரிவில் கல்வி கற்ற மகிழூர் கண்ணகிபுரத்தை சேர்ந்த தம்பிப்பிள்ளை தினோஜன் மூன்று ஏ தர சித்திகளை பெற்று மாவட்ட மாவட்டத்தில் முதலாம் இடத்தினையும் அகில இலங்கை ரீதியில் எட்டாவது இடத்தினையும் பெற்று சாதனை படைத்துள்ளார்.

பாடசாலையின் நிர்வாகத்திற்கு பொறுப்பான பிரதி அதிபர் நாராயணபிள்ளை நாகேந்திரன் மாணவனுடைய திறமையை பாராட்டி வாழ்த்து மடல் வழங்கி பொன்னாடை போர்த்திய கௌரவித்ததுடன் எதிர்காலத்தில் மருத்துவ சேவையினை இப் பிரதேச மக்களுக்கு சிறந்த முறையில் வழங்க வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்.

## இந்திய வைரஸுடன் இலங்கையில் ஒருவர்

வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு வந்து, தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஒருவரிடம் இந்தியாவில் பரவும் புதிய வகை வைரஸ் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இலங்கையில் பி.1.617 என்ற வைரஸே அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனையின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு மற்றும் உயிரணு விஞ்ஞான பீடத்தின் பணிப்பாளர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.




## 130 கர்ப்பிணிகளுக்கு கொவிட் இருவரின் நிலை கவலைக்கிடம்

தொற்றுக்குள்ளான அதிகமான கர்ப்பிணிகள் முல்லேரியா, நெவில் பெர்னாண்டோ மற்றும் ஹோமாகம ஆகிய வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனால், இயலுமானவரை வீட்டில் இருந்து கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுமாறு கர்பிணிகளுக்கு குடும்ப நல சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா ஆலோசனை வழங்கியுள்ளார்.







# மாநகர சபைகளில் சிறந்த சபை மட்டக்களப்பு மாநகர சபை

## கருணா புகழாரம்

(சசி)

மட்டக்களப்பு மாநகர சபையின் செயற்பாட்டினை நான் பாராட்ட விரும்புகின்றேன் சிறந்த முறையில் முன்னெடுத்து செல்கின்றனர் என்று கருணா அம்மான் தெரிவித்துள்ளார் .

கடந்த சில மாதங்களாக மட்டக்களப்பு மாநகரசபையில் ஏற்பட்டுள்ள அரசியல் அதிகார பிரச்சனை தொடர்பாக அவருடைய கட்சி சார்ந்த ஒருவரும் ஈடுபடுகிறார்கள் என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு இவ்வாறு பதில் அளித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்;

அண்மையிலேயே அனைவரும் அறிந்த விடயம் அந்த அமரர் ஊர்தி விடயம் பாரிய பூதாகரமாக வெடித்திருந்தது .

பாராளுமன்ற உறுப்பினர் ஜனா அவர்களுடைய பெருந்தன்மையான விடயம் தான் அந்த அமரர் ஊர்தி அதை யாராயிருந்தாலும் எதிர்க்கக் கூடாது என்பதே எமது நிலைப்பாடு.

அந்த விடயத்தை ஒரு அரசியலாக்கி மாநகரசபை செயற்பாடுகளை குழப்புகிறார்கள் என்று அறிய முடிகின்றது இந்த விடயத்தில் எங்கள் சார்பாக போட்டியிட்ட ஒருவரும் சம்மந்தபாடுள்ளர் அவரை நாங்கள் கண்டித்து இருந்தோம். இது போன்ற செயற்பாடுகளுக்கு போக வேண்டாம் என்று காரணம் நாங்கள் மக்களின் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கவேண்டும் .

என்னைப் பொறுத்தவரையில் மட்டக்களப்பு மாநகர சபையை



குற்றம்சாட்டுவததற்கு அங்கு ஒரு விடயமும் இல்லை மாநகர சபையை சிறந்தமுறையில் மட்டக்களப்பு முதல்வர் நடத்திக் கொண்டு வருகின்றார்

ஆகவே மாநகர சபை செயற்பாட்டுக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் இன்று பார்க்கப்போனால் பாரிய மாற்றங்களை அவர்கள் மேற்கொண்டு இருக்கின்றார்கள் ஆகவே வரவேற்கக் கூடிய விடயம் என்று தான் நான் தெரிவிக்க முடியும்.

கே . வசந்தகுமார் என்பவர் எங்களுடைய கட்சி என்று நாங்கள் கூற முடியாது அவர் எங்களுடன் இயங்குவதும் இல்லை அவரைவேறு பிரச்சினை காரணமாக நாங்கள் இடைநிறுத்தி உள்ளோம் தனிப்பட்ட முறையிலே தான் அவர் செயற்பட்டு வருகின்றார்.

மாநகர சபை இவர் தொடர்பகா விளக்கம் கேட்கும் பட்சத்தில் அதற்கான தெளிவான விளக்கத்தை அளிப்பதற்கு நான் தயாராக இருக்கின்றேன் மட்டக்களப்பு மாநகர சபை செயற்பாடு சிறப்பாக இருப்பது என்று தான் என்னால் கூற முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 138 கிராம அலுவலகர் பிரிவுகள் முடக்கம்

உள்ளன என்று கோவிட் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும், இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.மேலும் தெரிவிக்கையில், கொழும்பு, காலி, கம்பஹா, களுத்துறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இன்று காலை முதல் 21 கிராம அலுவலர் பிரிவுகள் புதிதாக முடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, குருநாகல் மாவட்டத்தின், குளியாப்பிட்டி பொலிஸ் பிரிவில் 19 கிராம அலுவலர் பிரிவுகளைத் தவிர்ந்த ஏனைய இடங்கள் முடக்க நிலையிலிருந்து இன்று விடுவிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார்.

## மட்டக்களப்பை அச்சுறுத்தும் கொரோனா கட்டுப்படுத்த விழிப்புணர்வு நடவடிக்கை

மாவட்ட மக்களைப் பாதுகாத்து, கோவிட்19 தொற்றுப் பரவலை மாவட்டத்திற்குள் கட்டுப்படுத்தும் நோக்கில் மாவட்ட கோவிட் 19 தடுப்புச் செயலணியால் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக மட்டக்களப்பு மாவட்ட மக்கள் கோவிட் 19 தொற்றிலிருந்து தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்ளக் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பிலும், கோவிட் தடுப்பு மருந்து ஏற்றுவதன் ஊடாக நாம் அடையும் நன்மை தொடர்பாகவும், விழிப்புணர்வூட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதன் ஒரு அங்கமாக சர்வோதய தொண்டு நிறுவனத்தின் சுவோதய நடமாடும் பிரிவின் ஊடாக முன்னெடுக்கப்படும் நடமாடும் டிஜிட்டல் வாகனத்தின் கோவிட் 19 விழிப்புணர்வு செயற்பாடுகள் நேற்று ஓட்டமாவடி, வாழைச்சேனை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் தமது சேவைகளை முன்னெடுத்தது.

இதன் போது மட்டக்களப்பு சர்வோதயத்தின் வெளிக்கள பணிப்பாளர் ஈ.எல்.ஏ.கரீம், ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர் உள்ளிட்ட சமூக செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.மாவட்டம் பூராகவும் 5 நாட் செயற்பாடாகக் குறித்த விழிப்புணர்வு செயற்பாடானது காணொளி, விழிப்புணர்வு துண்டுப்பிரசுரம் மற்றும் ஸ்டிக்கர் ஒட்டும் செயற்பாடுகள் ஊடாக மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலக பிரிவுகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளது.

சர்வோதயத்தின் தலைவர் சமூக நல விசேட வைத்திய நிபுணர் வின்னயா ஆரியரத்ன அவர்களது ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் இவ்வாறான விழிப்புணர்வு செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனா நிதியத்தின் 1,600 மில்லியன் ரூபா நிதி எங்கே?

இரண்டாவது டோசினை ஏற்றிக்கொண்டதன் பின்னர் ஊடங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

உண்மையில் நான் கொரோனா தடுப்பூசியின் இரண்டாவது டோசினை எடுத்துக் கொள்ளக் கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே இருந்தேன். ஏன் என்றால் எனக்கு 30 வயது.என்னை விட தேவை உள்ளவர்கள் கூடுதலாக இருக்கும் போது நான் இந்த தடுப்பூசி எடுப்பது பொருத்தமில்லை என்று எண்ணியிருந்தேன்.

ஆனாலும் சமூக வலைத்தளங்கள் மற்றும் ஊடகங்கள் ஊடாகவும் ஒரு அமைச்சர்கள் தங்களுக்கும், தங்களது உறவினர்களுக்கும் வீட்டிற்கே அழைத்து கொரோனா தடுப்பூசியினை எடுக்கிறார்கள் என அறிந்ததன் பின்னர் நானும் இந்த தடுப்பூசியினை எடுப்பது பிழை இல்லை என்ற தீர்மானத்திற்கு வந்து விட்டேன்.

அத்துடன், கிழக்கு மாகாணத்தில் பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகள் ஒருநாளைக்கு 500 முதல் 600 வரையில்தான் கிடைக்கக்கூடியதாக காணப்படுகின்றது. அதுவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம்தான் இருகின்றது.

சுமார் 10 நாட்களுக்கு பின்னர் பி.சி.ஆர் பரிசோதனைகளின் முடிவுகள் கிடைக்குமாக இருந்தால், தனிமைப்படுத்தல் என்பதே தேவைப்படாத ஒரு விடயம்.

கொரோனா ஒழிப்புக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியினை யாரோ ஒருவர் கொள்ளையடிக்கின்றனரா என்ற சந்தேகம் கூட எங்களுக்கு காணப்படுகின்றது. இது மாபியாவாக வருமானம் உழைப்பதற்காக செய்யப்படுகின்ற ஒரு விடயமா என்ற சந்தேகம் கூட இருக்கின்றது.

இதுவொரு இனத்துவேசமான அரசாங்கம், அம்பாறை ஆதார வைத்தியசாலைக்கு 45 மில்லியன் ரூபாய் பெறுமதியான ஒரு கொரோனா நிலையம் ஒன்றினை வழங்கியுள்ளனர்.ஆனால் அது இயங்காத நிலையில் காணப்படுகின்றது.

இட்டுகம கொரோனா நிதியத்திற்கு இலங்கையிலுள்ள அதிகளவான நிறுவனங்கள், அமைப்புகள், பொதுமக்கள் என நிதியினை வழங்கியுள்ளனர். ஜனாதிபதியின் செயலாளரின் அறிக்கையின்படி ஜனவரி 31 ஆம் திகதியளவில் கொரோனா நிதியத்தில் ஆயிரத்து 720 மில்லியன் ரூபாய் பணத்தில் ஆறு வீதமான பணம்தான் செலவிடப்பட்டுள்ளது.

ஆகவே எஞ்சியுள்ள ஆயிரத்து 600 மில்லியன் ரூபாய் நிதி எங்கே? எனக்கேள்வி எழுப்பியுள்ளார்.

## போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரியை மோதிய வாகன சாரதி அம்பாறையில் கைது

மகா விஹாரைக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளதுடன், கப் வாகனம் மோதியதில் பொலிஸாரின் 600 சிசி மோட்டார் சைக்கிள் கடுமையாக சேதமடைந்துள்ளது.

இதன் போது குறித்த விபத்தில் அம்பாறை பொலிஸ் போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி காயமடைந்துள்ளதுடன் இவ்விபத்தினை ஏற்படுத்திய காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் காயமடைந்த போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் இருவரும் சிகிச்சைக்காக அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## முடங்கியது திருமலை

தேவைகளுக்கான பொருட்கள் விற்பனைகள் தவிர்ந்த அனைத்து கடைகளும் மூடப்பட்டுள்ளன. இதனால், திருகோணமலை மாவட்டத்தின் நகர்ப் பகுதி, மூதூர்,கந்தளாய் மற்றும் கிண்ணியா ஆகிய நகரப் பகுதிகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றது.

இதேவேளை, திருகோணமலை நகரமானது முற்றாக முடக்கப்படும் என்ற வதந்தி சமூக ஊடகங்களில் பரவிவந்ததால் மக்கள் மத்தியில் அச்சநிலை ஏற்பட்டுள்ளது.

## திருமலையில் 18 பேர் பலி 1831 பேருக்கு தொற்று உறுதி

இடம்பெற்றுள்ளதாகவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் நேற்று காலை 10 மணிக்கு வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியிலேயே 07 மரணங்கள் சம்பவித்துள்ளதாகவும், உப்புவெளி பகுதியில் ஆறு மரணங்களும், மூதூரில் இரண்டு மரணங்களும், கந்தளாயில் இரண்டு மரணங்களும், கிண்ணியாவில் ஒரு மரணமும் சம்பவித்துள்ளது.

அத்துடன் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் இரண்டு மரணங்கள் திருகோணமலை மற்றும் உப்புவெளி சுகாதார வைத்திய பிரிவில் இடம்பெற்றுள்ளது. இதேவேளை நேற்று வெள்ளிக்கிழமை (07ம்) திகதி காலை முதல் சனி காலை பத்து மணி வரைக்கும் 68 தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளதாகவும் அதில் 18 பேர் திருகோணமலை நகர் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிய வருகின்றது.

மேலும் உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியில் எட்டு பேரும், குச்சவெளி பிரதேசத்தில் 8 பேரும், கந்தளாய் பகுதியில் 7 பேரும், மூதூரில் 07 பேரும், பதவிசிறிபுர சுகாதார வைத்திய பணிமனைகுட்பட்ட பகுதியில் 7 பேரும், குறிஞ்சாங்கேணி பகுதியில் 5 பேரும், தம்பலகாமத்தில் 5 பேரும், கோமரங்கடவல பிரதேசத்தில் இருவரும், கிண்ணியாவில் ஒருவரும் இணங் காணப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டி.ஜீ எம் கொஸ்தா தெரிவித்தார்.

## இலங்கையில் 5 வகையான கொரோனா வைரஸ் பரவல்

ஆகிய மாவட்டங்களில் உலக நாடுகள் பலவற்றில் பரவிவரும் வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனையின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு மற்றும் உயிரணு விஞ்ஞான பீடத்தின் பணிப்பாளர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

பிரித்தானிய மாகாணமான கென்டில் பரவிவரும் பி.1.1.7 என்ற வைரஸ் கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு மாநகர சபை பகுதி, ஹோமாகம, பொரலஸ்கமுவ உள்ளிட்ட பகுதிகளில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மேலும்,குருநாகல் மாவட்டத்தில் பொல்பித்திகம, குளியாபிட்டி, நிகவரெட்டிய, கனேவத்தை, அம்பலன்பொல, கிரிவுல்ல, பன்னல, வாரியபொல, மற்றும் பண்டுவஸ்நுவர ஆகிய பகுதிகளிலும் குறித்த வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது.

அதேபோல்,கண்டி மாவட்டத்திலும், பொலன்னறுவை மாவட்டத்தின் ஹிங்குரக்கொட மற்றும் மெதிரிகிரிய, பிரதேசங்களிலும் மன்னார் நகர பகுதியிலும் இந்த வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், டென்மார்க்,ஐரோப்பிய நாடுகள், மத்திய கிழக்கு நாடுகளிலும் பரவிவரும் பீ.1.428 என்ற வைரஸ் திரிபுடன் யாழ்ப்பாணத்தில் பலர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் நல்லூரில் குறித்த வைரஸ் பரவிவருகின்றமையும் கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையில் ஏற்கனவே பரவல் அடைந்திருக்கின்ற கொரோனா வைரஸின் பி.1.411 என்ற புதிய வகை மட்டக்களப்பு மற்றும் கொழும்பின் சில பிரதேசங்களில் பரவி வருவதாகவும் தெரியவந்துள்ளது.

நைஜீரியாவில் பரவும் பீ.1.525 என்ற வைரஸ் கொழும்பு மாவட்டத்தின் சில பகுதிகளிலும் களுத்துறை மாவட்டத்தின் பண்டாரகமை பிரதேசத்திலும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதனிடையே கொழும்பில் அமைந்துள்ள தனியார் தனிமைப்படுத்தல் மையம் ஒன்றில் பீ.1.351 என்ற தென்னாப்பிரிக்க வைரஸ் திரிபு கண்டறியப்பட்டுள்ளதாகவும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின், ஒவ்வாமை, எதிர்ப்புச் சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான பீடம் தெரிவித்ததுள்ளது.

SwissLife
Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...


மருத்துவ காப்புறுதி

வாகனக் காப்புறுதி

குழந்தைகளுக்கான காப்புறுதி

ஆயுட் காப்புறுதி

சட்டக் காப்புறுதி


Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch | Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65



# உதயகுமார் கல்வி நிலையம்




முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை

தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+0966502126923

n.uthayakumar1981@gmail.com



SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்

10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க

- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த

இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி





# SRI JEWELLERY

Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch



MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும்
பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen



# Aaran Ayurveda
& Wellness Massage



Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

# தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினரை விமர்சிக்க பேரினவாத கட்சி உறுப்பினருக்கு எந்த அருகதையும் இல்லை

## பா.அரியநேத்திரன்



(எஸ்.சபேசன்)

தமிழ் தேசிய கூட்டமைப்பை பற்றியோ அதில்உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பாகவோ அரசுடன் இணைந்து செயல்படும் சிங்கள பெரும்பான்மை கட்சிகளின் உறுப்பினர்கள் விமர்சிப்பதற்கு எந்த அருகதைகளும் இல்லை என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சி ஊடக செயலாளரும் பட்டிருப்பு தொகுதி இலங்கை தமிழரசு கட்சி தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரும் அம்பாறை மாவட்ட இலங்கை தமிழரசுகட்சி மத்தியகுழு உறுப்பினருமான கலையரசன் தமிழ் மக்களின் நலனை கருத்தில் கொண்டு பேசுவதில்லை என ஸ்ரீலங்கா பொதுசன பெரமுனையின் கல்முனை பிராந்திய செயல்பாட்டாளர் அகமட் புர்கான் தெரிவித்த கருத்து தொடர்பாக ஊடகவியலாளர் கேட்டபோது அதற்கு பதில் கூறுகையில்.

தமிழ்தேசியகூட்டமைப்பு என்பது ஏனைய அரசியல் கட்சிகளைப்போன்று ஆட்சியமைக்கும் அரசாங்கங்களுக்கெல்லாம் வால் பிடிக்கும் கட்சியில்லை கொள்கைரீதியாக தமிழ்மக்களுடைய உரிமைகள் தொடர்பாகவே அரசுடன் பேசி தமது நோக்கை அடைவதற்காக உழைத்துவரும் ஒருகட்சியாகும்.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த 2020,ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் அரசுடன் இணைந்து செயல்பட்ட ஒருவர் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரம் உயர்த்துவார் என்ற அதி நம்பிக்கையின் அடிப்படையில் அம்பாறை மாவட்டத்தின் பெருவாரியான தமிழ்மக்கள் தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு எதிராக வாக்களித்தமையால் அம்பாறையில் தமிழ் பிரதிநித்துவம் ஆளும் தரப்பிலோ எதிர்தரப்பிலோ இல்லாமல் போனது.

அரசனை நம்பி புரிசனை கைவிட்ட நிலையில் அம்பாறை மாவட்ட தமிழ்மக்கள் அநாதரவாக இருப்பதை கருத்தில் கொண்ட தமிழ்தேசிய கூட்டமைப்பு தலைமை தமது கட்சிக்கு கிடைத்த ஒரேயொரு தேசியப்பட்டியலை அம்பாறை மாவட்டத்திற்கு வழங்கினர்.

கடந்த 2004,ம் ஆண்டு இன்றுவரை தமிழ்தேசியத்திற்காக உயிரைக்கொடுத்து தமிழ்தேசிய அரசியலை அம்பாறை மண்ணில் கால் ஊன்ற உழைத்த வருவரே தவராசா கலையரன் ஆவார் கடந்த இக்கட்டான காலகட்டங்களில் எல்லாம் தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு தோளோடு தோள்நின்று பணிபுருந்தவர் மட்டுமன்றி பல தேர்தல்களில் வேட்பாளர்களாக வருவதற்கு பலர் முன்வராமல் அச்சத்தால் இருந்த வேளைகளிலும் துணிந்து முன்வந்து தமிழ்தேசிய அரசியலுக்கு உந்து சக்தியாக திகழ்ந்தவரே கலையரசன்.

அவ்வாறான ஒருவர் கடந்த 2006,இல் நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளராகவும் 2012, கிழக்குமாகாண சபை உறுப்பினராகவும் 2015, பொதுத் தேர்தலிலும்,2020, பொதுத்தேர்தலிலும் அம்பாறை மாவட்டத்தில் வேட்பாளராக நிறுத்தப்பட்டு கணிசமான வாக்குகளை தமிழ்தேசியகூட்டமைப்புக்கு பெற்றுக்கொடுத்த ஒரு தமிழ்தேசிய கொள்கைவாதியாக நாம் இனம் கண்டதாலேயே தேசியப்பட்டியல் த. கலையரசனுக்கு வழங்கப்பட்டது என்பதை அனைவரும் புரிந்து கொள்வது அவசியம்.அம்பாறை மாவட்டத்தின் தமிழ் தேசிய அரசியலின் கடந்தகால, நிகழ்கால,எதிர்கால வரலாற்றை கருத்தில் கொண்டே அவர் பொருத்தமானவர் என்ற அடிப்படையில் தேசியபட்டியல் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு வாக்களித்த அனைவருக்கும் இந்த வரலாறு தெரியும் ஆனால் சிங்கள பேரினவாத கட்சியை சேர்ந்த ஒருவர் பொறுப்பு வாய்ந்த ஒரு வடகிழக்கு மக்களின் உரிமைக்கான அரசியல் செயல்பாடுகளைவலியுறுத்தி இன்று சர்வதேசம் மதிக்கத்தக்க தலைவர் இரா.சம்மந்தன் ஜயாவை தலைமையாக கொண்டு அரசியல் செய்யும் தமிழ்தேசிய கூட்டமைப்பு வழங்கிய தேசியபட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை மிகவும் கீழ்த்தரமான முறையில் விமர்சிப்பதற்கு எந்த தகுதியும் இல்லை.

நாம் வேறு ஒரு கட்சியில் வெற்றி பெற்ற வருவரையோ, அல்லது வேறு கட்சியூடாக தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவான ஒருவரையோ எந்த விதத்திலும் பிளையாக விமர்சிக்கமாட்டோம்.

முதலில் அரசியல் நாகரீகத்தை கற்றுக்கொள்ளவேண்டும்.ஒருகட்சி உறுப்பினரை இன்னொரு கட்சி உறுப்பினர் பிழையாக விமர்சிப்பது என்பது எந்தக் கட்சியாலும் ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்று எனவும் மேலும் கூறினார்.

# கந்தளாய் பகுதியில் சீமெந்து ஏற்றிச் சென்ற வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் இருவர் காயம்

எப்.முபாரக்

திருகோணமலை மவட்டத்தின் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சீமெந்து ஏற்றிச் சென்ற வாகனமொன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் கந்தளாய் தள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்விபத்து நேற்று சனிக்கிழமை அக்போபுர 87 ஆம் கட்டை சந்தியில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதில் 36 வயதுடைய ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஹபரனையிலிருந்து கந்தளாய் பகுதிக்குச் மோட்டார் சைக்கிளில் சென்றவர் திருகோணமலையிலிருந்து தம்புள்ளைக்கு சீமேந்து ஏற்றிச் சென்ற வாகனத்தில் வேகமாக சென்று நேருக்கு நேர் மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சீமேந்து லொறியின் சாரதியை பொலிஸார் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு,விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்போபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# ஈச்சந்தீவு விபுலாநந்தா வித்தியாலய அதிபர் ஓய்வு பெறுகிறார்

(பொன்ஆனந்தம்)

திருகோணமலை கிண்ணியா வலயக்கல்வி பிரிவில் உள்ள ஈச்சந்தீவு விபுலாநந்தா வித்தியாலய அதிபர் இராசேந்திரம் அன்பழகன் நேற்று சனிக்கிழமையுடன் ஓய்வு பெற்றுள்ளார்.

இவ்வித்தில் 2010 தொடக்கம் 2021 வரை அதிபராக பணியாற்றிய இவர் தனது சேவைக்காலம் நிறைவடைந்த நிலையில் ஓய்வு பெற்றுள்ளார்.

மிகவும் சிறப்பாகக் கடமையாற்றி பாடசாலையின் பல்துறை வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த அதிபர் இரா.அன்பழகன் அவர்களுக்கு எமது பாடசாலையின் சார்பில் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். என பாடசாலை சமூகம் பாராட்டியுள்ளது.

பிரபல கவிஞர் தாமரை தீவான் என. ழைக்கப்படும் இவ்வித்தியாலத்தின் முன்னைநாள் அதிபர் சோமநாதர் இராசேந்திரம் அவர்களின் புதல்வரே அன்பழகனாவார். இவ்வித்தியாலத்தின் வளர்ச்சி யில் இவர்களது குடும்பத் தினரின் பங்களிப்பு சிறப்பான தாகும்.

# ‘தமிழர்களைக் காட்டிக் கொடுத்தது நீங்கள்தான்’

## ஹரீஸ் எம்.பி.க்கு ஜெயசிறில் பதிலடி

(காரைதீவு சகா)



தமிழர்கள் காட்டிக்கொடுத்தார்கள், கைக்கூலிகள் என ஹரீஸ் எம்.பி.பேசியதை வன்மையாக கண்டிக்கிறேன். உண்மையில் கடந்த காலங்களில் தமிழர்களைக் காட்டிக்கொடுத்தது நீங்கள்தான் என்பதை உலகறியும் என்று தமிழ் தேசியக்கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தரும் காரைதீவு பிரதேச சபை தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் எச்.எம்.எம்.ஹரீஸ் எம்.பி பேசியதற்கு கண்டனஅறிக்கையொன்றை வெளியிட்டு அவர் மேலும் கூறுகையில்:

இனவிடுதலைக்காகவும் நிலவிடுதலைக்காகவும் தனது சுகபோகங்களையெல்லாம் விட்டெறிந்துவிட்டு மக்களோடு மக்களாக நின்று எந்தவித சாதிமத வேற்றுமை பாராட்டாமல் பணியாற்றிவருபவர் சாணக்கியன் எம்.பி. அவர்கள்.

நிசாட் அசாத்சாலி போன்றோர் கைதுசெய்யப்பட்டதற்கும் சரி ஜனாசா எரிப்பிற்கும் சரி துணிந்து நின்று குரல்கொடுத்தவர் அவர்.

அவர் தனது பாட்டனார் போன்று முஸ்லிம் மக்களையும் அரவணைத்தே செல்கிறார். அவர் முஸ்லிம்கள் சார்பாகப்பேசியபோது நாவினிக்க காதுகுளிர அனைவரும் ‘சாணக்கியன்தான் தலைவன்’ என்று ஜால்ரா அடித்தார்கள்.

அதே சாணக்கியன் தனது இனத்திற்காக குரல்கொடுக்கின்றபோது அவர் இனவாதியாக கத்துகிறார்கள்.அவர் மும்மொழி விற்பன்னர்.முஸ்லிம் மக்களுக்கு மட்டுமல்ல எந்த மக்களுக்கும் எதிரானவரல்ல. கல்முனைவாழ் 40ஆயிரம் தமி;ழர்களை அடகுவைத்து பேசியிருந்தால் சாணக்கியன் நல்லவர்.

தமிழர்களது போராட்டம் எப்போதும் சிறுபான்மைமுஸ்லிம்களையும் இணைத்தே நடந்திருக்கிறது.

ஆனால் நீங்கள் கல்முனையை வைத்து அரசியல்பிழைப்பு நடாத்தி அரியாசனம் ஏறிவருகிறீர்கள். முஸ்லிம் மக்கள் நல்லவர்கள். அவர்களது அறியாமையை பயன்படுத்தி இனவாதத்தை விதைத்து அதில் குளிர்காய்ந்துவருகிறார்.

கல்முனையின் பூர்வீகம் வரலாறு தெரியாமல் மீண்டும் மீண்டும் பச்சைப்பொய்யைச்சொல்லி கல்முனையை காப்பாற்றுவதற்கு அதாவது தமிழரிடமிருந்து பாதுகாக்கவே 20க்கு கைதூக்கினோம் என்றீர்கள். யார் சமுகத்தை காட்டிக்கொடுத்தவர்? யார் கைக்கூலி? என்பதையறியலாம்.

தமிழ்த்தலைவர்கள் நல்லிணக்கம் என்ற நல்லெண்ண சமிக்ஞையை காட்டியபோதெல்லாம் நீங்கள் தொடர்ந்து அரப்பு வைத்துவந்ததே வரலாறு. உதட்டளவில் நல்லிணக்கம் பேசுகிறீர்கள். உள்ளத்தளவில் வைரம்பாராட்டி தங்கள் வேலைகளை மாத்திரம் பூர்த்திசெய்துகொண்டீர்கள்.

நல்லிணக்கம் என்ற போர்வையில் அரப்புவைத்தகாலம் மலையேறிவிட்டது.இனி அந்தப்பருப்பு வேகாது.

கல்முனையை வைத்து இனவாதஅரசியல் செய்கிறீர்கள் என்று அன்று கோடீஸ்வரன் எம்.பி கூறினார். இன்று சாணக்கியன் கூறினால் அதைப்பொறுக்கமுடியாது காட்டிக்கொடுத்தவர்கள் கைக்கூலிகள் என்று கத்துகிறீர்கள்.இனி இப்படிப்பட்ட கதைகளை நிறுத்துங்கள்.

வரலாற்றில் தமிழ்சமுகத்தை காட்டிக்கொடுத்தவர் யார்? கைக்கூலிகள் யார்? என்பதை முழுநாடே அறியும்

# வாழைச்சேனையில் விசேட மஹாம்ருத்யுஞ்ஜய யாக பூசை


ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் உயரிய சிந்தனைக்கு அமைவாக நாட்டில் கொரோனா நோய் தாக்கங்கள் நீங்கப்பெற்று நாட்டு மக்கள் சுகமாகவும் சுபீட்சமாகவும் வாழும் முகமாக இறை அருள் வேண்டி சர்வமத வழிபாடுகள் நாடளாவிய ரீதியில் இடம் பெற்று வருகின்றது.

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில் நேற்று கொரோனா நோய் தாக்கம் நீங்கப்பெற்று நாட்டு மக்கள் சுகமாக வாழ வேண்டி பிராத்தனைகள் இடம்பெற்றது.

அந்தவகையில் வாழைச்சேனை ஸ்ரீ கைலாயப் பிள்ளையார் முத்துமாரியம்மன் ஆலயத்தில் விசேட மஹாம்ருத்யுஞ்ஜய யாக பூசைகள் இடம்பெற்றதுடன், கொரோனா வைரஸ் பரவல் நீங்கி மக்கள் பாதுகாப்பு வேண்டி அபிஷேகப் பூசைகள் என்பன இடம்பெற்றது.

குறித்த பூசைகள் யாவும் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ பத்மஸ்ரீதர குருக்கள் தலைமையில் இடம் பெற்றது. இதில் வாழைச்சேனை கிராம அதிகாரி எஸ்.வரதராஜன் மற்றும் ஆலய நிருவாகத்தினர் சுகாதார விதிமுறைகளை பேணி கலந்து கொண்டனர்.








# விஷேட துஆப் பிரார்த்தனையும் இப்தார் நிகழ்வும்



(சர்ஜுன் லாபீர்)

கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து நாட்டை மற்றும் நாட்டு மக்களை பாதுகாக்க ஆசி கோரும் வகையில் நாட்டில் உள்ள அனைத்து இந்து, பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லீம் மத வழிபாட்டு தலங்களில் விஷேட வழிபாட்டு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் இறக்காமம் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நேற்று சனிக்கிழமை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கினங்க இறக்காமம் பிரதேச அனைத்து ஜும்ஆ பள்ளிவாசல்களிலும் கொரோனா வைரஸ் தொற்று நோயிலிருந்து நாட்டையும் நாட்டு அனைத்து மக்களையும் பாதுகாக்க வேண்டி விஷேட துஆப் பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

இறக்காமம் பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் அல்-ஹாஜ் அஷ்-ஷெய்க் ஏ.கே. அப்துல் ரஊப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதீதியாக பிரதேச செயலாளர் அல்-ஹாஜ் எம்.எம் நஸீர் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

விஷேட அதீதியாக இறக்காமம் பிரதேச சபை தவிசாளர் அல்-ஹாஜ் எம்.எஸ். ஜெமீல் காரியப்பர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் இந்நிகழ்வில் இறக்காம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.வை. ஜௌபர், நிர்வாக உத்தியோகத்தர் எம்.ஜே.எம். ஜெமீல் உட்பட ஜம்மியத்துல் உலமா சபை பிரதிநிதிகள், பள்ளி நிருவாக சபை உறுப்பினர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# எமது பிரதேச இன ஐக்கியத்தை சீர்குலைக்கதும் சக்திகளை ஒன்றிணைந்து தோற்கடிப்போம்

## முன்னாள் கல்முனை மாநகர முதல்வர் சிராஸ் மீராசாஹிபு

(சர்ஜுன் லாபீர்)



அண்மைய நாட்களில் எமது கல்முனை மாநகரத்தில் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுயற்றுதல் சம்பந்தமாக பாராளுமன்றத்திலும், சமூக வலைத்தலங்கிலும் பேசப்படும் விடயம் சம்பந்தமாக முன்னாள் கல்முனை மாநகர முதல்வர் கலாநிதி. சிராஸ் மீராசாஹிப் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தனது அறிக்கையில் மேலும் கருத்து தெரிவிக்கையில்....

எமது கல்முனை மாநகரத்தில் முஸ்லீம் தமிழ் சிங்கள மக்கள் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்துவரும் இவ்வேளையில் அதனை சீர் குலைப்பதற்காக கல்முனை வடக்கு உப பிரதேச செயலக தரமுயற்றுதல் என்ற விடயத்தை பூதாகரமாக மாற்றி அதில் தங்களது சுய நல அரசியலை இதற்குள் விதைக்க சிலர் முனைகின்றனர் இதற்கு எமது மாநகர மக்கள் ஒரு போதும் துணை போகிவிட வேண்டாம் என பணிவுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

இது விடயமாக கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் கலாநிதி. சிராஸ் மீராசாஹிப் மேலும் குறிப்பிடுகையில்.

எமது கல்முனை மாநகரத்தில் 70% முஸ்லீம்களும், 30% தமிழர்களும் ஒரு குறிப்பிட சில சிங்கள குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றனர் இங்கு பெரும்பான்மையாக முஸ்லீம் சமூகமே வாழ்ந்து வருவதும் இங்கு குறிப்பிட்டு நோக்கத்தக்கதாகும்.

கடந்தகாலத்தில் கல்முனை பிரதேசம் கல்முனை பட்டினசபை என்று தற்போதுள்ள கல்முனை நகர்பகுதியுடன் கல்முனைக்குடியும், கல்முனை தெற்கு கிராமோதய சபையென்று சாய்ந்தமருது பகுதியும், கல்முனை மேற்கு கிராமோதய சபையென்றும், நற்பட்டிமுனை, சேனைக்குடியிருப்பு பகுதிகளும், கல்முனை வடக்கு கிராமோதய சபையென்று பாண்டிருப்பு,மருதமுனை, நீலாவனை போன்ற இடங்கங்களை உள்டக்கிய நான்கு சபைகள் காணப்பட்டன அவற்றுக்கான எல்லைகளும் வகுப்பட்டிருந்தன பின்னர் 1987ல் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கந்தில் ஒரு திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டு பிரிந்திருந்தவற்றை ஒன்றாக்கி பிரதேச சபைகள், நகரசபைகள் சட்டம் கொண்டுவரப்பட்ட போதுதான் கல்முனை மாநகரம் ஒரு நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

அப்பொழுது இந்த மக்கள் மிகவும் ஒற்றுமையுடன் வாழந்து தங்களுக்கிடையில் எந்த பிரிவினையையும் கேட்கவுமில்லை அவரவர் உரிமைகளை மதித்து விட்டுக்கொடுப்புடன் வாழ்ந்து வந்தனர்.

இன்று இந்த நாட்டைக் குட்டிச்சுவராக்கிய கொடிய யுத்தம் தோற்றம் பெற்றதோ அன்றிலிருந்துதான் இந்த இன முரண்பாடு தோற்றம் பெற்றது.

யுத்தம் முடிவுக்கு வந்த பிறகு இப்பொழுது ஓரளவுக்கேனும் எமது சமூகங்கள் எமது பிரதேசங்களில் வேற்றுமைகளை மறந்து மக்கள் நிம்மதியாக வாழ்ந்து வரும் சூழ்நிலையில் அதனைக் குழைப்பதற்கு சில தீய சக்திகள் முயன்று கொண்டிருப்பதைப் பார்க்கும் போது மிகவும் வேதனையாகவுள்ளது.

நான் இந்த மாநகரத்தின் மேயராக பதவியேற்ற பொழுது எமது தேசியத் தலைவர் அல்- ஹாஜ் ரவூப் ஹக்கீம் அவர்களும், எமது பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம். எம் ஹரீஸ் அவர்களும் என்னிடம் கூறிய விடயம் நீங்கள் ஒரு இளம் முதல்வராக உள்ளீர்கள் உங்களது காலத்தில் இன, மத, பிரதேச வேறுபாடின்றி சேவை செய்து இன ஐக்கியத்தை இந்த கல்முனையில் ஏற்படுத்த வேண்டும் என கூட்டாக வேண்டிக் கொண்டார்கள்.

அந்த காலப்பகுதியில் கல்முனை மாநகர மக்களுக்கு எந்த விடயமாக இருந்தாலும் எவ்வித பாகுபாடின்றி தன்னாலான அனைத்து சேவைகளையும் செய்து காட்டினோம் இதனால் தான் இன்றும் எமது மாநகரத்தின் எல்லா இன மக்களாலும் விரும்ப்பட்ட ஒரு முதல்வராக இருந்து வந்துள்ளேன் என்பதனை இக்காலப்பகுதியில் என்னோடு இருந்த கல்முனை மாநகரசபை த.தே. கூட்டமைப்பு உறுப்பினர்கள் மட்டுமல்ல எதிர்கட்சியிலுள்ள அத்தனை கட்சிகளின் உறுப்பினர்களும் சாட்சிபகருவார்கள் ஆகவே கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அவர்களே நீங்களும் ஒரு இளம் பாராளுமன்ற உறுப்பினர் எவ்வகையான பிரச்சினைகளாக இருந்தாலும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வினைக்கானலாம் சிறுபான்மை சமூகமான நாங்கள் இரண்டு சமூகங்களும் எமக்குள் முட்டி மோதி பிரிவினையை வழக்காமல் எமது எதிர்கால சந்ததி இந்த பிரதேசத்தில் நிம்மதியாக வாழ்வதற்காக எமது இரு சமூகத்திலுமுள்ள எல்லாமட்டத்திலுமுள்ள பிரதிநிதிகளை அழைத்து இப்பிரச்சினைக்கொரு நிலையான நிரந்தரமான ஒரு தீர்வினைக்கான நாம் அனைவரும் ஒன்றினைந்து உழைக்க வேண்டும் என வேண்டிக் கொள்கின்றேன்.

# களுதாவளை ம.வி.தேசிய பாடசாலையில் 166 மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு

(ரக்ஸனா)



அண்மையில் வெளியான க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மட்.பட். களுதாவளை ம.வி.தேசிய பாடசாலையில் இருந்து 166 மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியுள்ளனர்.

அண்மையில் வெளியான க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மட்.பட்.களுதாவளை ம.வி.தேசிய பாடசாலையில் இருந்து பரீட்சைக்கு தோற்றிய 232 மாணவர்களில் 166 மாணவர்கள் பல்கலைக் கழகங்களுகத் தெரிவுக்கு விண்ணப்பிக்க முடியும். இதில் உயிரியல் துறையில் 5 பேரும் பௌதிகவியல் துறையில் 3 பேரும் கலைத்துறையில் 74 பேரும், வர்த்தகத்துறையில் 11 பேரும் பொறியியல் தொழினுட்பத்துறையில் 44 பேரும் மற்றும் உயிர்முறைமைகள் தொழினுட்பத்துறையில் 29 பேரும் உள்ளடங்குவர்.

ச.கிசாந்த் மருத்துவ பீடத்துக்கும், எம்.விஜீவன் உயிர்முறைமைகள் தொழினுட்பத்துறையில் மாவட்டத்தில் முதல் நிலையினையும், ஜெ.ஹினுஷான் பொறியியல் தொழினுட்பத்துறையில் மாவட்டத்தில் இரண்டாம் நிலையினையும், எஸ்.விஜிதா, உயிர்முறைமைகள் தொழினுட்பத்துறையில் மாவட்டத்தில் மூன்றாம் நிலையினையும் பெற்று பாடசாலைக்கு பெருமையினை தேடிக் கொடுத்துள்ளனர். இவர்களை வழிப்படுத்திய அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் பெற்றோருக்கும் பாடசாலையின் அபிவிருத்தி சங்கமும் பழைய மாணவர் சங்கமும் பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறது.

# களுவாஞ்சிகுடி ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடு

(ரக்ஸனா)

பிரமதர் மஹிந்த ராஜபக்ஷவின் எண்ணக்கருவிற்கு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினுடைய இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இலங்கை உட்பட உலக நாடுகளையே உலுக்கிக் கொண்டிருக்கின்ற கொவிட் - 19 எனப்படும் கொரோனா நோயிலிருந்து மக்கள் விடுபட வேண்டும் எனும் நோக்குடன் மக்கள் தங்கள் தங்கள் மத அனுஸ்டானங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் கொவிட் தொற்று பரவல் நீங்கி சுபீட்சமான வாழ்வு மலரவும் உலக மக்களின் நன்மையையும் இலங்கை மக்களின் நன்மையையும் வேண்டி சனிக்கிழமை விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ.சண்முக மயூரவதன குருக்கள் தலைமையில் விசேட பூஜை வழிபாடு மாலை 5.46 மணியளவில் நடைபெற்றது.இதன் போது சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்ட ஆலய நிர்வாகத்தினர் மாத்திரம் கலந்து கொண்டிருந்தனர்.



# எமது பிரச்சனைகளை தீர்க்க வேண்டுமாக இருந்தால் உயர்மட்டங்களோடுதான் பேசவேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப்

(பைஷல் இஸ்மாயில்)



முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏழு பேரும் பிரதமரை சந்தித்து முஸ்லிம்களுடைய பிரச்சனைகள் தொடர்பாக கலந்துரையாட வேண்டும் என்று பிரமரிடம் கோரியிருந்தோம். அதற்கு அமைவாக கடந்த 5 ஆம் திகதி எங்களை சந்திக்க முடியும் என்று பிரதமர் தெரிவித்தார். ஆனால் நாங்கள் நோன்போடு இருக்கிறோம் குறித்த நேரம் நோன்பு திறப்பதற்கான நேரமாக இருக்கின்றது என்ற விடயத்தை நாங்கள் தெரியப்படுத்திய பின்னர், பிரதமரும் பிரச்சனை இல்லை நீங்கள் நோன்பு திறப்பதற்கனா இப்தார் நிகழ்வையும் நான் ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் வாருங்கள் என்று பிரதமர் அழைப்பு விடுத்திருந்தார். அதனாலேயே அந்த சந்திப்பின் போது நோன்பு திறப்பதற்கான இப்தார் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டதே அல்லாமல் இப்தார் நிகழ்வுக்காக நாங்கள் அங்கு செல்லவில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் தெரிவித்தார்.

அரசுக்கு ஆதரவளித்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்த விடயம் தொடர்பில் பொதுமக்களிடத்தில் பல முரன்பாட்டுக் கருத்துக்கள் வெளியாகிக் கொண்டு இருக்கின்றன. இது தொடர்பில் உங்கள் கருத்தென்ன? அங்கு பேசப்பட்ட விடயங்கள் என்ன? என வினவியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த சந்திப்பு இடம்பெற்ற தினத்தன்று இப்தாரை முடித்துக்கொண்டு பிரதமரை சந்தித்து முஸ்லீம் சமூகத்தினுடைய முக்கியமான பேசுபொருள்கள் சம்பந்தமாக பேசியிருந்தோம். அதில் முஸ்லீம் அரசியல் தலைவர்கள் மதத்தலைவர்கள் போன்றவர்களின் அண்மைக்கால கைது தொடர்பாகவும், அதேபோன்று 11 முஸ்லிம் அமைப்புக்கள் தடை செய்யப்பட்டிருக்கின்றன இந்த அமைப்புக்களினுடைய தடைகள் நீக்கப்படவேண்டும் மற்றும் ஜமாதே இஸ்லாமியாவின் முன்னாள் தலைவர் அஜூல் அக்பர் அவர்கள் ஒரு நிரபராதி என பலமுறை நிரூபிக்கப்பட்டும் அவர் மீண்டும் கைதுசெய்து அடைத்து வைக்கப்பட்டிருப்பதில் உள்ள பிரச்சனைகள் என்பன பற்றி நாம் பேசியிருந்தோம்.

அதேபோன்று எமது அம்பாறை மாவட்டம் மற்றும் ஏனைய மாவட்டங்களில் உள்ள காணிப்பிரச்சினைகள் தொடர்பாக பேசியிருந்தோம் மேலும் தொல்பொருள் திணைக்களத்தினால் வருகின்ற நெருக்கடிகள் தொடர்பாகவும், பொத்துவில் மண் மலை விவகாரம் தொடர்பாகவும் பேசியிருந்தோம். அதேபோன்று கல்முனையினுடைய விவகாரங்கள் பேசப்பட்டன இவ்வாறு முஸ்லிம் சமூகம் சார்ந்து பேசப்பட்ட வேண்டிய பல விடயங்கள் பற்றி நாம் எமது கருத்துக்களை எடுத்துரைத்தோம்.

அதன்போது மிகவும் சாதகமான விதத்தில் பிரதமர் அவருடைய பதில்களை வழங்கி இருந்தார். அதேபோன்று வேறு சில விடயங்கள் தொடர்பாக உரிய அமைச்சு சார்ந்தவர்களையும் அழைத்து பிறிதொரு சந்திப்புக்கும் ஏற்பாடு செய்வதாகவும் அவர் தெரிவித்திருந்தார். அந்த சந்திப்புகளின் போது சில விடயங்களுக்கான தீர்வுகள் எட்டப்படும் என்பதை நாம் நம்புகின்றோம். எனவே இது ஒரு ஆரோக்கியமான சந்திப்பு. ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்பதற்கும் அப்பால் எமது பிரச்சனைகளை தீர்க்க வேண்டுமாக இருந்தால் நாம் உயர்மட்டங்களோடுதான் பேசவேண்டும் அந்த அடிப்படையில்தான் பிரதமருடனான சந்திப்பு இருந்தது. இது எமது சமூகத்துனுடைய பிரச்சனைகள் நாம் அதைப்பற்றி பேசவேண்டிய ஒரு தார்மீக பொறுப்பு இருக்கிறது. வெறுமென நாம் அரசாங்கத்துடன் பகைத்துக்கொண்டு இருக்கிறோம் என்பதாக அரசை விட்டு தூரமாக எதைப் பற்றியும் கதைக்காமல் நாங்கள் வெறுமனே எமது காலங்களை கடத்தி எமது மக்களின் ஒவ்வொரு பிரச்சனைகளையும் இழந்து போவது ஒரு பாராளுமன்ற உறுப்பினராக மக்கள் பிரதிநிதியாக எமது பொறுப்பு அல்ல அது மிகவும் மிலேச்சத்தனமான நடவடிக்கையாக அது மாறும், அவ்வாறு அல்லாமல் தேவையான விடயங்களை பேசி எமது சமூகத்தின் உரிமைகளை பிரச்சினைகளை வென்றெடுப்பதற்கான உபாயங்கள் என்ற அடிப்படையில்தான் நாம் சந்திக்கின்றோம்.

இதனை ஒரு குறுகிய நோக்கத்துடன் பார்த்து விமர்சனம் செய்கின்ற மிக மோசமான அந்த கலாச்சாரம் இந்த நாட்டில் இருந்து ஒழிய வேண்டும் ஒரு நாட்டினுடைய ஜனாதிபதி என்பவர் ஒரு நாட்டினுடைய பிரதமர் என்பவர் அரசாங்கத்தில் அதி உச்ச இடத்தில் இருப்பவர்கள் அவர்களுக்கான கௌரவத்தை கொடுக்கவேண்டும் அவர்களிடம் சில விடயங்களை பெற்றுக்கொள்வதென்பது மிக முக்கியமான ஒரு மக்கள் தேவையாக இருக்கின்றது.

எனவே கட்சி பேதங்கள் பார்த்து அவர்களோடு கோபித்துக்கொண்டு இருக்கிறோம் என்கின்ற அடிப்படையில் நாமும் நமது பாடும் என்று திரிவது அல்லது அவ்வாறு அரசாங்கத்தினுடைய உச்ச அதிகாரங்களை அணுகி பிரச்சனைகளை தீர்க்க முனைபவர்களை விமர்சிப்பது என்கின்ற மோசமான அரசியல் கலாச்சாரம் அரசியல்வாதிகளிடத்திலும் ஒரு சில விமர்சகர்கள் என்கின்றவர்களிடத்தில் இல்லாமல் இருக்கவேண்டும் என்பதுதான் எமது விருப்பமாக இருக்கின்றது என்று அவர் சுட்டிக்காட்டினார்.



# சந்தையில் 1600 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட பசளை 2300 வரையில் உயர்வு

## – விவசாயிகள் விசனம்!!



(வி.சுகிர்தகுமார்)

சந்தையில் 1600 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட யூரியா பசளை தற்போது 2300 வரையில் விற்பனை செய்யப்படுவதாக ஆலையடிவேம்பு பிரதேச சபை உறுப்பினர் ரி.நவநீதராஜ் தெரிவித்துள்ளதுடன் விவசாயிகளும் விசனம் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு சில விற்பனை நிலையங்களில் பசளை இல்லையெனவும் அவ்வாறான நிலையங்களில் பசளை பதுக்கப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதேநேரம் கிருமிநாசினி மற்றும் களைநாசினி போன்றவை விலைக்கழிவின்றி பொறிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

இரசாயணப்பசளை பாவனை தொடர்பில் அன்மையில் அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையினை தொடர்ந்தே இந்த நிலை உருவாகியுள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இந்நிலையில் இதுவரையில் மானியப்பசளையும் தமக்கு வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

இதனால் சிறுபோக வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பல்வேறு சிக்கல்களுக்கு முகம்கொடுத்துள்ளதாகவும் கூறுகின்றனர்.

ஆகவே இது தொடர்பில் அரசாங்கமும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளும் உடன் நடவடிக்கை எடுத்து விவசாயிகளை பாதுகாக்குமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சிறுபோக நெற்செய்கையினை சேதப்படுத்திய கட்டாகாலி மாடுகள் வளைத்துப் பிடிப்பு



(வி.சுகிர்தகுமார்)

அம்பாரை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் சி றுபோக நெற்செய்கையினை சேதப்படுத்திய கட்டாகாலி மாடுகளை விவசாய அமைப்பினரின் உதவியுடன் விவசாயிகள் சிலர் இணைந்து வளைத்துப் பிடித்து அடைத்து வைத்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை பனங்காடு சிப்பித்திடல் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதுடன் குறித்த கால்நடை உரிமையாளர்கள் தமக்கான நஷ்ட ஈட்டை வழங்க வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் இச்சம்பவம் தொடர்பில் பொலிசார் பிரதேச செயலகம் பிரதேச சபை மற்றும் விவசாய திணைக்களம் உள்ளிட்டவர்களிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்நிலையில் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் அன்மைக்காலமாக அதிகரித்து வரும“ கட்டாக்காலி மாடுகளினால் விவசாயிகள் உள்ளிட்ட பொதுமக்களும் வீதிகளில் பயணிக்கும் வாகன சாரதிகள் மற்றும் பாதசாரிகளும் பல அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பில் ஆலய ஒலிபெருக்கி மற்றும் நேரடியாகவும் கால்நடை உரிமையாளர்களுக்கு தகவல் வழங்கியும் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காது கால்நடைகளை வீதிகளில் அலைமோத விட்டுள்ளனர்.

இதனால் தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் சிறுபோக நெற்செய்கையினை பாதுகாக்க முடியாத நிலை தோன்றியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

ஆகவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடன் இதற்கான நடவடிக்கை எடுத்து தமக்கான நிரந்தர தீர்வை பெற்றுத்தருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தமிழர் வாழ்கின்ற இடத்தில் விகாரை எதற்கு? பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் கேள்வி!

(சகா)

2500 வருடங்கள் வரலாற்று தொன்மை வாய்ந்த அடையாளம் உள்ள தமிழரின் இடத்தில் பௌத்தவிகாரை அமைக்க பிக்கு முயற்சிப்பதை ஏற்கமுடியாது. தொன்மையான இடம் தொல்பொருள் திணைக்களத்தால் பாதுகாக்கப்படவேண்டுமே தவிர விகாரை அமைத்து ஆக்கிரமிக்க முடியாது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஈரளக்குளம் கிராமத்திலுள்ள புளுட்டுமானோடை மலை புராதன



கால அடையாளங்களுடன் உள்ளது. இது பௌத்தவிகாரைக்குரியது என்று கூறி பிக்கு ஒருவர் அங்கு விகாரை கட்டுவதற்கு கிழக்கு மாகாண ஆளுநரிடம் அனுமதி கேட்டுள்ளார் ஆளுநரும் இதற்கு அனுமதி வழங்குமாறு கடிதம் எழுதியுள்ளார்.

புராதன சின்னம் என்றால் அதனை தொல்பொருள் திணைக்களம் அதனை பாதுகாக்க வேண்டும் மாறாக இப்படி விகாரை அமைக்க அனுமதிக்க முடியாது. இங்கு தொடர்ச்சியாக வழிபாடுகள் இடம்பெற்றிருந்தால் வழிபடுவதற்கு அனுமதிக்கலாம் ஆனால் அங்கு இரண்டாயிரம் வருடங்களாக எதுவும் இடம்பெறவில்லை இது தமிழரின் புராதன வரலாற்று தொன்மையுடன் சம்மந்தப்பட்ட இடமாகும்.

கடந்த 2016 ஆம் ஆண்டு மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தின் வலதுகரை அபிவிருத்தி திட்டத்தை முன்னெடுப்பது என நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அந்த தீர்மானத்தின் பிரகாரம் மயிலத்தைமடு பிரதேசததில் நடக்க இருக்கும் சிங்க குடியேற்றத்திற்குதான் இந்த இடத்தில் புத்த விகாரை கட்ட முயற்சிக்கப்படுகின்றது.

இது அங்கிருந்து 15 கி.மீ தொலைவில் உள்ளது அன்றைய காலத்தில் கண்ணை மூடிக்கொண்டு ஆதரவு வழங்கிய த.தே.கூட்டமைப்பும் இதற்கு பொறுப்பு கூற வேண்டும் என்றார்.

# பெறுமதிமிக்க மனித உயிர்களைப் பாதுகாப்பதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்!



(பைஷல் இஸ்மாயில், எஸ்.எம்.அறூஸ்)

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் திடீரென அதிகரித்து வருகின்ற நிலையில் அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் உள்ள பொதுமக்களை பாதுகாப்பது தொடர்பான அவசர ஆலோசனை கூட்டம் கடந்த வியாழக்கிழமை அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் சாபீர் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எல். அமானுல்லா, அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நஸீல், சிரேஸ்ட பொதுச்சுகாதார பரிசோதகர்

சமூர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் பங்கேற்றனர்.

இங்கு அட்டாளைச்சேனை பிரதேசத்தில் கொரோனா வைரஸ் தொற்றினை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்கின்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடித்தல், மற்றும் கொரோனா பரவல் குறித்து பொதுமக்கள் மத்தியில் முன்னெடுக்கும் விழிப்புணர்வு செயற்பாடுகள் தொடர்பில் அதிகம் கவனம் செலுத்தப்பட்டது.

அத்தோடு அரசாங்கத்தினதும், சுகாதாரத்துறையினரதும் அறிவுறுத்தல்களை பொதுமக்கள் கட்டாயமாக பின்பற்றவும், பெறுமதிமிக்க மனித உயிர்களைப் பாதுகாப்பதற்காகவும் சகல

# ஈஸ்டர் தாக்குதல் குறித்து முஸ்லிம்கள் மீது பலிசுமத்தப்படுவது ஒரு நியாயமான செயல் அல்ல!

## – பாராளுமன்ற உறுப்பினர் முஷர்ரப் தெரிவிப்பு

(சில்மியா யூசுப்)

கடந்த ஆண்டில் நிகழ்ந்த ஈஸ்டர் தாக்குதலை எடுத்து கொண்டால் ஈஸ்டர் தாக்குதலிலே கருவிகலாக முஸ்லிம் சமூகத்தை சேர்ந்தவர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் முஷர்ரப் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், நேரடியாக தாக்கத்தில் ஈடுபட்டவர்கள் முஸ்லிம் சமூகத்தில் இருந்தவர்கள்.இதில் ஸஹ்ரான் குழுவினர் முஸ்லீம்களாக இருந்திருக்கின்றனர். எனவே முஸ்லிம்களுக்கு இதில் முற்று முழுதாக பங்கு இல்லை என்று பொறுப்பு துரக்க முடியாது. இவர்கள் இயக்கப்பட்டு இருக்கின்றனர். வேறு சிலர் தீய சக்திகள் அவர்களது அரசியல் தேவைகளுக்காக ஓரிரு தேவைக்காக இந்த முஸ்லிம் சமூகத்தில் உள்ள ஒரு குழுவினை

அம்பலமாக தொடங்கியிருக்கின்றது அதுமட்டுமன்றி இந்த குறிப்பிட்ட குழுவினர் தொடர்பான ஒரு சமூகத்தில் இருக்கும் பிரஜைகள் தொடர்பாக முஸ்லிம்கள் அதாவது இந்த தாக்குதலில் தொடர்புபடாதவர்கள் முஸ்லிம்கள் மிகவும் பொறுப்புணர்வோடு நடந்துள்ளனர். குறிப்பாக காத்தான்குடி 2015 களில் இந்தக் குழு அடிப்படைவாதிகளாக இருக்கின்றனர் முஸ்லீம் சமூகத்துக்கு உள்ளேயே வேறு சில இஸ்லாமிய அமைப்புகளை தாக்குகின்றனர். வாள் கொண்டு வெட்ட முயற்சிக்கின்றனர் எனவே இவர்களை கைது செய்யுங்கள் விசாரணை செய்யுங்கள் என்று காத்தான்குடி சமூகம் அதேபோன்று ஜம்மியத்துல் உலமா இவற்றை அடையாளம் கண்டு சொல்லி இருக்கின்றது. இவ்வாறான பொறுப்பான ஒரு விடயத்தை முஸ்லிம் சமூகமும்

நடந்திருக்கின்றார்கள். இந்தத் தாக்குதலை மையப்படுத்தி ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் தவறு என்றோ அனைவரும் அடிப்படைவாதிகள் தீவிரவாதிகள் என்றோ விமர்சனம் செய்வது மிகுந்த வலி மிக்கதாக ஏற்றுக்கொள்ளவே முடியாத விடயமாக இருக்கின்றது.

இந்தக் குழுவினை இயக்கியவர்கள் கண்டறியப்பட்டால் இதனுடைய எல்லா தன்மைகளும் வெளி வரும். எனவே இந்த குழுவினரை இயக்கியவர்களை கண்டறிவது சம்பந்தமாக முரண்பாடுகள் இருக்கின்றது அல்லது ஒருவருக்கு ஒருவர் விமர்சனம் செய்து கொண்டு இன்று எல்லா கட்சியினரும் இதனை வைத்து அரசியல் செய்வதை தான் நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம் மாறாக இந்த சூத்திர காரர்கள் கண்டறியப்படாவிட்டாலும் பரவாயில்லை சாதாரண அப்பாவி

# கொரோனாவில் இருந்து உலக வாழ் மக்கள் விடுபட வேண்டி
# கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான் தோன்றீஸ்வரர் ஆலயத்தில் விசேட யாகம்







(கல்லடி நிருபர்)

தற்போது உலகை உலுக்கிவரும் கொவிட் 19 தொற்றுப் பரம்பல் நீங்கி சுபீட்சமானதொரு வாழ்வு மலர உலக மக்களின் நன்மையும் இலங்கை வாழ் மக்களின் நன்மைக்காகவும் வேண்டி சர்வமதப் பிரார்த்தனைகள் நாடு பூராகவும் இன்று 08.05.2021 ஆந் திகதி சனிக்கிழமை மாலை 5.46 மணிக்கு இடம்பெற்றது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஸ அவர்களது எண்ணத்தில் உதித்த சிந்தனைக்கு அமைவாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஊடாக நாடு பூராகவுமுள்ள சர்வமத ஸ்தலங்களுக்கு அறிவுறுத்தப்பட்டமைக்கு அமைவாகவே இவ் விசேட பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

இதன் பிரகாரம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கையில் உள்ள அனைத்து இந்து ஆலயங்களிலும் விசேட மஹாம்ருத்யுஞ்ஜய யாக வழிபாட்டினை ஆலய அறங்காவலர் மற்றும் கிரியைகளை நிறைவேற்றும் சிவாசாரியார்களோடு மட்டுப்படுத்தி, விளக்கேற்றி மானசீகமாகப் பிரார்த்தனையை நிறைவேற்றுமாறு பணித்திருந்தமைக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்திற்கான பிரதான விசேட யாக பூசை இன்று கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இடம்பெற்றது.

அதே வேளை மாவட்டத்திலுள்ள பிரசித்திவாய்ந்த பௌத்த, கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் மதஸ்தலங்களிலும் விசேட ஆராதனைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

---

# ஜனாதிபதி நினைப்பதையெல்லாம் பிரயோக ரீதியில் நடத்திவிட முடியாது
## மட்டு.விவசாய சம்மேளனத்தின் தலைவர்

உரத்தடையின் மூலம் எமது நாட்டின் பொருளாதாரம் நிச்சயம் வீழ்ச்சியடையும். இன்றைய நிலையில் நாம் நம்பியிருக்கின்ற உற்பத்தி அரிசியும், ஒரு பாதி தேங்காயுமேயாகும். அதுவும் இல்லாமல் இறக்குமதி செய்யும் நிலைமைக்கே நாடு வந்து சேரும். ஜனாதிபதி நினைப்பதையெல்லாம் பிரயோக ரீதியில் நடத்திவிட முடியாது. என மட்டக்களப்பு மாவட்ட விவசாய சம்மேளனத்தின் தலைவர் நடேசன் சுந்தரேசன் தெரிவித்தார்.

மட்டு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று எமது மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கு எவ்வித உதவிகளும் இல்லை. மருந்து வகைகக், கிருமிநாசினிகள் கூட வழங்கப்படவில்லை. பசளையும், உரமருந்துகளும் இல்லாமல் மிகவும் கஸ்டமான நிலையை எதிர்நோக்கி இருக்கின்றார்கள். இது தொடர்பில் அரசாங்கத்திடம் தெரிவித்தால் அவர்கள் இயற்கை உரத்தையே பாவிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துகின்றார்கள். இத்தனை காலங்களும் நாங்கள் செயற்கை உரங்களையே பாவித்து வந்தோம். அது உடலுக்குக் கேடானதுதான். கடந்த அரசாங்க காலத்தின் போது இவ்விடயத்தை நாங்கள் கூறி இயற்கை உரம் பற்றியும் கூறியிருந்தோம். ஆனால் அந்த அரசாங்கம் இதனைக் கவனத்தில் கொள்ளவில்லை. இயற்கை உரப் பாவணை விடயத்தைச் சிறிது சிறிதாகவே நடைமுறைப்படுத்த வேண்டுமே தவிர திடீரென நடைமுறைப்படுத்த முடியாது.



மட்டக்களப்பு மாவட்டத்தில் 90 வீதமான நிலங்கள் பசளையற்ற நிலங்களாகவே காணப்படுகின்றன. இதற்கு நாங்கள் பசளைகளைப் போட்டுத்தான் பயிர்களை உருவாக்க முடியும். இந்த நிலையில் எமது மாவட்டத்திற்கு உரமானது நிச்சயமாகத் தேவையான ஒன்று. எனவே இந்த உரத்தை அரசாங்கத்திற்கு வழங்க வக்கில்லாது விட்டால். எமக்குத் தரவேண்டிய மானிய உரத்தையாவது காசுக்குத் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த உரம் வழங்கும் செயற்பாடு நிறுத்தப்பட்டமையானது 60 வீதமான விவசாயிகளைக் கொண்ட இந்த நாட்டிலே விவசாயிகளின் தொழில் முயற்சிகள் இல்லாமல் போவது மாத்திரமல்லாமல், இலங்கைக்குத் தேவையான முப்பதின் ஒரு பங்கு நெல் உற்பத்தியும் இல்லாமல் போகும்.

திடீரென இயற்கை உரத்தைப் பயன்படுத்துவதால் விளைச்சல் மிகவும் குறைந்த நிலையில் தான் காணப்படும். அதாவது ஒரு கிலோ நெல் சுமார் 250 ரூபாவிற்குக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். இயற்கை உரத்தில் நைற்றஜன் தன்மை மிகக் குறைவு நைற்றஜன் தேவை என்றால் யூரியா பயன்படுத்தியே ஆக வேண்டும். நைற்றஜனை நம்பியே விவசாயிகள் வாழுகின்றார்கள்.

இது தொடர்பில் அரசுடன் உள்ள அரசியல்வாதிகளும் கண்டுகொள்கின்றார்கள் இல்லை. அவர்கள் தொடர்பில் மிகவும் வேதனையாகத்தான் இருக்கின்றது. அங்கு ஜனாதிபதி என்ன சொல்கின்றாரோ அதைத்தான் இவர்களும் சொல்வார்கள். இவர்கள் இதனை விளங்கப்படுத்தி, எமது மண்ணை ஆராய்ந்து, பரிசோதனை அறிக்கையை அவரிடம் கொண்டு சென்று, எமது விவசாயிகளின் உரத் தேவையை அவருக்குத் தெளிவுபடுத்தும் தன்மை அவர்களுக்கு இருக்குமோ தெரியாது.

இவ்வாறு உரத்தடையின் மூலம் எமது நாட்டின் பொருளாதாரம் நிச்சயம் வீழ்ச்சியடையும். இன்றைய நிலையில் நாம் நம்பியிருக்கின்ற உற்பத்தி அரிசியும், ஒரு பாதி தேங்காயுமேயாகும். அதுவும் இல்லாமல் இறக்குமதி செய்யும் நிலைமைக்கே நாடு வந்து சேரும்.

எவ்வாறு புதிய நெல்லினங்களை உற்பத்தி செய்தாலும், அவற்றால் நீரைக் குறைத்துப் பாவிப்பது, சில உரப் பாவணைகள் இல்லாமல் இருக்குமே தவிர தனித்து இயற்கை உரத்தில் உற்பத்தி என்ற நிலையை உருவாக்காது. ஏனெனில் நைற்றஜன் இல்லாவிட்டால் நெல் மஞ்சள் அடித்து நெல் உற்பத்தி மிகவும் வீழ்ச்சியடையும்.

இவ்வாறு உரம் நிறுத்தப்பட்டமையால் மட்டக்களப்பு மாவட்டத்தில் நேரடியாக விவசாயத்தில் ஈடுபடும் 40 வீதமான விவசாயிகளும், மறைமுகமாக 20 வீதமான விவசாயிகளுமாக மொத்தம் 60 வீதமான விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள்.

ஜனாதிபதி நினைத்துக் கொண்டார் காலையில் மரவள்ளி நாட்டினால் மாலையில் மரவள்ளிக் கிழங்கு எடுக்கலாம் என்று. இவை திடீரென்று செய்யக் கூடிய விடயம் அல்ல. மஞ்சள் இறக்குமதியை முற்றாக நிறுத்திவிட்டு தான் செல்லும் இடங்களுக்கெல்லாம் மஞ்சள் கன்றுகளை வழங்குகின்றார். அந்தச் செடிகள் எப்போது வளர்ந்து நாம் எப்போது மஞ்சள் உபயோகிப்பது. மஞ்சள் இறக்குமதியைப் பாதியாகக் குறைத்துவிட்டு இவ்வாறன செயற்பாடுகளை முன்னெடுத்திருக்க வேண்டும். மஞ்சள் என்பது ஒரு மருத்துவப் பொருள். இதனைத் தடை செய்ததென்பது மிகவும் கொடூரமான செயல். எனவே ஜனாதிபதி நினைப்பதையெல்லாம் பிரயோக ரீதியில் நடத்திவிட முடியாது.

எனவே இவ்வாறான நிலைமைகளைக் கருத்திற்கொண்டு தற்போதைய நிலையினைச் சமாளிப்பதற்காகவாவது எமக்கு இரசாயண உரங்களை வழங்குவதோடு, இந்த இரசாயண உரப் பாவணையை எவ்வாறு குறைப்பது என்று நன்கு திட்டமிட்டு இதனை கட்டம் கட்டமாக ஐந்து வருடங்களுக்குள் குறைத்து இயற்கை உரத்தை உற்பத்தியாக்கும் முறைமையைச் சீனாவில் இருந்து அறிந்து இயற்கை உர உற்பத்தியை உருவாக்கிய பின் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

---

# சுற்று நிருபங்களுக்கு முரணாக நடந்து கொள்வதை அக்கரைப்பற்று கல்வி அலுவலகம் நிறுத்துமா?

முகாமைத்துவ சேவை உத்தியோத்தருக்குரிய பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவி (நிதிப் பிரிவில்) மீண்டும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது. தொடர்பில் அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற் சங்கம் கடந்த 6 ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றினை செய்துள்ளது.

முறைப்பாட்டினை மேற்கொண்டதன் பின்னர் தொழிற்சங்கத்தின் தலைவர் ஏ.ஜீ.முபாறக் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 2017 ஆம் ஆண்டிலும் இவ்வாறு ஒரு தடவை சுற்று நிருபங்களுக்கு முரணாக பதவி வழங்கபட்ட போது இது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர், கிழக்கு மாகாண பிரதம செயலாளர், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டபோது, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்குரிய கடமைப் பொறுப்புக்களை அவர்களுக்கே வழங்கும்படி பணித்திருந்தனர். குறித்த கடிதங்களின் பிரதிகளையும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.



இதனையடுத்து இப்பதவி தமது சேவையைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்கப்பட்ட போதிலும், அவர் வருடாந்த இடமாற்றம் பெற்று சென்றதைத் தொடர்ந்து மீண்டும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்பட்டமை சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும்.

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தில் சுற்று நிருபங்களுக்கு முரணாக நடந்து கொள்வது தொடர்ந்து வருவதாகவும், அரச சேவையில்லாதவர்கள் அலுவலகத்தில் கடமையாற்றுவது, ஓய்வு பெற்றுச் சென்றவர்கள் தாடர்ந்தும் இருந்தமை, பிரயாணக் கொடுப்பனவினை வழங்க மறுத்து ஊழல் மோசடிகள் ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு சென்று அறவிட்டமை என பல முறைகேடுகள் சுட்டிக்காட்டத்தக்கன.

இவ்விடயங்கள் தொடர்பாக கல்விச் சேவை ஆணைக்குழுவிற்கும் அறிவிக்கப்படவுள்ளதென இதன்போது தெரிவித்திருந்தார்.

---

# மீராவோடை உம்மு சுலைம் மகளிர் அரபுக் கல்லூரி மாணவிகள் 5 பேர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு

(எச்.எம்.எம்.பர்ஸான்)

இம்முறை வெளியான க.பொ.த.உயர்தர பரீட்சை பெறுபேற்றின் படி ஓட்டமாவடி மீராவோடை உம்மு சுலைம் மகளிர் அரபுக் கல்லூரி மாணவிகள் 5 பேர் பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கல்லூரியில் இம்முறை 13 மாணவிகள் உயர்தர பரீட்சையில் தோற்றி அதில் 5 மாணவிகள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில், எச்.எப்.ருக்சானா 3 அ, ஏ.பீ.எப். றில்ஹானா 2 அ, 1 இ, எம்.பீ.அஸ்ரிபா 2 அ,1 ஆ, பீ.எம்.யூ.ஏ.அம்மாறா 2 அ, 1 ஆ, எஸ்.எப்.சஹ்னாஸ் 1 அ, 1 ஆ, 1 இ பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

இவ்வாறு சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகியுள்ள மாணவிகளுக்கு கல்லூரி நிருவாகத்தினர் வாழ்த்துக் களை தெரிவித்துள்ளனர்.



நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com